People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

19.3.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 12.3.2011 முதல்18.3.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**12-3-2011 முதல் 18-3-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 34 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 8 |
| 5. | வகுப்பறை வன்முறை | 4 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | – |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | – |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 14 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | 3 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | 1 |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 72 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-11
# 12.3.2011 முதல் 18.3.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 778. | 12.3.2011 | **வேலூர் மாவட்டம்:** அம்பலூர் அரசு பள்ளியில் 10ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களை. வெயிலில் மணலில் உட்காரவைத்து தேர்வு எழுதிய மாணவர்களின் உடல்நிலை பாதிப்பு. | வகுப்பறை வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 779. | 12.3.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருவைகுண்டம் அருகே ஏரலில் காவலர்கள் வாகனச்சோதனையில் ஈடுபட்டனர். பதிவு செய்யாத புதுமினி லாரியில் கடத்தி வரப்பட்ட மணல் பறிமுதல். லாரி பறிமுதல். | மணல் கொள்ளை | தீக்கதிர் |
| 780. | 12.3.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் பசும்பொன் நகரைச் சேர்ந்த சேதுராமன் மனைவி சரோஜினிதேவி. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக சரோஜினிதேவி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 781. | 12.3.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே உள்ள காரியாம்பட்டியைச் சேர்ந்த சின்னசாமி மகள் விஜயலட்சுமி.(18). மணப்பாறை அருகே உள்ள நயினாம்பட்டியைச் சேர்ந்த வாலிபர் விஜயலெட்சுமியை கடத்திச் சென்றதாக சின்னசாமி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 782. | 13.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரில் கல்விக்கட்டணம் என்ற பெயரில் அநியாயக் கொள்ளையடிக்கும் தனியார் பள்ளி நிர்வாகங்களிடம் சட்டத்தை அமலாக்க முடியாத காவல்துறை, நியாயம் கேட்ட வாலிபர் சங்க நிர்வாகிகளைத் தாக்கியதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம். | கல்விக் கட்டணக் கொள்ளை & வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 783. | 13.3.2011 | **திருவாரூர் மாவட்டம்:** முத்துப்பேட்டையை அடுத்த முனங்காடு கிராமத்தைச் சேந்த உலகநாதன் மனைவி வசந்தா(40). மகன் கார்த்திக் வசந்தாவின் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சகோதரர் மகளுக்கும் கார்த்திக்கிற்கும் திருமணம் நடைபெற்றது. உலகநாதன் தனது மனைவி வசந்தாவிடம் திருமணத்திற்கு உனது சகோதரர் கொடுத்த வரதட்சணை குறைவு என சண்டைபோட்டதால் மனமுடைந்த வசந்தா விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 784. | 13.3.2011 | **சென்னை மாவட்டம்:** மைலாப்பூர் இன்ஸ்பெக்டராக பணியாற்றிவர் ஆர். ராஜசேகரன்(30 மேல் அதிகாரிகள் விடுமுறை கொடுக்காமல் அதிக பணிச்சுமை கொடுத்ததால் மனமுடைந்த ராஜசேகரன் தற்கொலை செய்துக் கொண்டதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை & தற்கொலை | தினத்தந்தி |
| 785. | 14.3.2011 | **புதுவை மாநிலம்:** புதுச்சேரி அருகில் உள்ள அரியாங்குப்பம் அங்காளம்மன் கோயில் திருவிழா நடந்தது. கோவில் திருவிழாவில் கலந்துக் கொண்ட பெண்களை வீராம்பட்டினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 5 பேர் கிண்டல் செய்ததால் இரு சமூகத்தினருக்கு இடையே கோஷ்டி மோதல். கலவரத்தில் ஈடுபட்டவர்கள் மீது காவலர்கள் துப்பாக்கி சூடு. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 786. | 14.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜெய்ஹிந்தபுரம் பகுதியிலுள்ள மாவு ஆலைகளில் ரேசன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக புகார். அதிகாரிகள் சோதனையில் ஜீவா நகர் கணேசன் என்பவர் ஆலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 8 மூடைரேசன் அரிசி மற்றும் லாரி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 787. | 14.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் அடுத்த உத்தனப்பள்ளி அருகே. வெங்கடேஷ்புரம் அக்ரஹாரம் கிராமத்தைச் சேர்ந்த சிக்கன்னா(52) மனைவி திம்மக்கா(45). வீட்டில் தனியாக இருந்த தம்பதியினரை கட்டிப்போட்ட மர்ம நபர்கள் பணத்தை கொள்ளையடித்ததோடு நகை இல்லாததால் ஆத்திரமடைந்த மர்ம நபர்களால் திம்மக்கா கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 788. | 15.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பேச்சியம்மன் படித்துறை வழியாக | ரேசன் அரிசி மற்றும் | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வந்த ஆட்டோவை அதிகாரிகள் சோதனை செய்ததில் ஆட்டோவில் இருந்த 10 மூட்டை ரேசன் அரிசி மற்றும் 60 லிட்டர் மண்ணெண்ணெய் பறிமுதல். | மண்ணெண்ணெய் கடத்தல் | |
| 789. | 15.3.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் அண்ணாநகரைச் சேர்ந்த சின்னப்பகவுண்டர்(87) மனைவி அருக்காணி(80). வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியை மர்ம நபர்கள் கொலை செய்ததோடு நகைகள் கொள்ளை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 790. | 15.3.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, சூளைமேடு, மேற்கு நமச்சிவாயபுரத்தைச் சேர்ந்த தனஞ்செயன்(83) மனைவி சுசீலா(75). தம்பதியினர் தங்களது மகன் கமலக்கண்ணன் வீட்டில் வசித்து வந்தனர். தனது மகன் மற்றும் மருமகள் பாக்கியலட்சுமி இருவரும் அடித்து துன்புறுத்துவதோடு, கொலை மிரட்டல் விடுப் முதியவர்கள் கமிஷனரிடம் புகார். | முதியவர்கள் மிதான வன்முறை | தினமலர் |
| 791. | 15.3.2011 | **தேனி மாவட்டம்:** பூதிப்புரத்தைச் சேர்ந்த ஞானசேகர் மனைவி சித்ரா. குழந்தைகள் விளையாடுவதில் ஏற்பட்ட தகராறில் அதே பகுதியைச் சேர்ந்த சந்திசேகர், ஞானசேகரன், பெரியசாமி, மூவரும் சேர்ந்து 7 மாத கர்ப்பிணியான சித்ராவை தாக்கியதாக சித்ரா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 792. | 15.3.2011 | **மதுரை மாவட்டம்:** எச்ஐவி/எய்ட்சால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டப்பாடு சங்கம் இணைந்து, 7 விதமாக சேவைகளை வழங்க இந்தியாவில் 10 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. மதுரையில் எய்ட்சால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் அனுமதியின்றி ரத்தப்பரிசோதனை நடத்தப்பட்டதோடு. எச்ஐவி குழந்தைகளுக்கு எச்ஐவி இல்லையென்று முடிவு | HIV நோயாளிகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிவிக்கப்பட்டுள்ளதாக புகார். | | |
| 793. | 15.3.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** குறவர் இன மக்களை காவல்துறையினர் சித்ரவதை செய்வதை நிறுத்தவேண்டும் என தமிழ்நாடு குறவர் பழங்குடி மக்கள் முன்னேற்ற சங்கம் ஆர்ப்பாட்டம். | பழங்குடி இன மக்கள் மீதான & காவல்துறை சித்திரவதை | தீக்கதிர் |
| 794. | 15.3.2011 | **தேனி மாவட்டம்:** தேனி சுக்குவாடன்பட்டி டெலிபோன் நகரைச் சேர்ந்த சந்திரன் மனைவி உமா மகேஸ்வரி அதே பகுதியைச் சேர்ந்த தனசேகரன் மனைவி சுபத்ரா, ராஜா மனைவி அன்னலட்சுமி இருவரிடமும் பணம் கடன் வாங்கினார். இருவரும் பணத்தை கேட்ட மிரட்டுவதாக உமாமகேஸ்வரி புகார். | கந்துவட்டிக் கொடுமை | தீக்கதிர் |
| 795. | 16.3.2011 | **ஈரோடு மாவட்டம்:** தாராபுரம் அலோசியஸ் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவி கவுசல்யா. அதே பகுதியைச் சேர்ந்த 10 பேர் மாணவியை ஈவ்—டீசிங் செய்ததால் மனமுடைந்த மாணவி கவுசல்யா தற்கொலை முயற்சி. மாணவி மருத்துவமனையில் அனுமதி. | குழந்தைகள் மீதான வன்முறை & ஈவ்—டீசிங் & தற்கொலை | சசிகலா |
| 796. | 16.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அமெரிக்கன் கல்லூரி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல்துறை தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 797. | 16.3.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை குமரன் நகர் காவல் நிலையத்தில் சட்டம் – ஒழுங்கு பிரிவு ஏட்டாக பணிபுரியும் கிருஷ்ணன்(51) அதிக பணிச்சுமை மற்றும் கடன் தொல்லையால் ஆசிட்டை குடித்துத் தற்கொலை. | காவல் நிலையச் சித்திரவதை & தற்கொலை | தினத்தந்தி |
| 798. | 16.3.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே சிறுமியை நரபலி கொடுத்ததாக அதே பகதியைச் சேர்ந்த கருப்பு மற்றும் அவரது தந்தை மகாமுனி இருவரும் கைது செய்யப்பட்டு மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் பிரச்சனையில், புகார் தருமாறு அரசு மருத்துவனை ஊழியர்களை காவலர்கள் மிரட்டுவதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| 799. | 16.3.2011 | **சென்னை மாவட்டம்:** திருவொற்றியூர் பகுதி எர்ணாவூர் பாரத் நகரில் வசித்து வரும் ரோசையா மரியம்மா தம்பதியினரின் மகள் பிரனதி(13). தங்கசாலை காவலர் குடியிருப்பில் உள்ள ஆயுதபடை காவலர் உலகநாதன் வீட்டில் வேலை செய்து வந்தார். உலகநாதன் பிரனதியை பாலியல் செய்து சித்திரவதை. சிறுமி தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துக் கொண்டதாக உலகநாதன் பிரனிதியின் பெற்றோரை மிரட்டி காசிதத்தில் எழுதி வாங்கியதோடு பெற்றோர் அனுமதியின்றி சிறுமியை அடக்கம் செய்ததாகவும் உலநாதன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பொதுமக்கள் சாலை மறியல். | குழந்தைகள் பாலியல் மீதான வன்முறை<br>&<br>காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 800. | 2.3.2011 | **திருவாரூர் மாவட்டம்:** நன்னிலம் கொட்டூர் சிவன்கோயில் தெருவைச் சேர்ந்த ரமேஷ்குமார்(26) மனைவி சுதா(21). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ரமேஷ் சுதா மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக ரமேஷ் மீது சுதா புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை | திருமுகம் |
| 801. | 2.3.2011 | **திருவாரூர் மாவட்டம்:** கொரடாச்சேரி அடுத்த புலியூர் பெருந்தரக்குடி வடக்குத் தெருவைச் சேர்ந்த கார்த்திக் மனைவி துர்காதேவி(26). திருமணமாகி 6 மாதங்களே ஆன நிலையில் குடும்பத் தகராறில் மனமுடைந்த துர்க்காதேவி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | திருமுகம் |
| 802. | 3.3.2011 | **நாகை மாவட்டம்:** நாகை அக்கரைப்பேட்டைச் சேர்ந்த முனவர் முரளி மனைவி இந்துமதி(25). அதே பகுதியைச் சேர்ந்த தங்கராசு மனைவி மலையரசி(21). இந்துமதி, மலையரசி இருவருக்கும் நடந்த தகராறில் மனமுடைந்த இந்துமதி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | திருமுகம் |
| 803. | 4.3.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த அகஸ்தியன்பள்ளியைச் சேர்ந்த லெட்சுமணன் மனைவி வைசாலி(21). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதால் | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | திருமுகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனமுடைந்த வைசாலி தூக்குப்போட்டுத் தற்கொலை. | | |
| 804. | 4.3.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை அடுத்த குத்தாலம்சாகமங்கலம் மூங்கிலடி தெருவைச் சேர்ந்த முனுசாமி மகள் சித்ரா(18). படிக்க பெற்றோர் அனுமதி மறுத்ததால் மனமுடைந்த சித்ரா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் |
| 805. | 5.3.2011 | **நாகை மாவட்டம்:** நன்னிலம் புலக்குடி ஆதிதிராவிடர் காலனி வடக்குத் தெருவைச் சேர்ந்த தங்கையன்மகள் சுகந்தி(16). பள்ளிக்குச் சென்ற சுகந்தியை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | திருமுகம் |
| 806. | 5.3.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருத்துறைப்பூண்டி அருகே உள்ள தெற்கு பாமணியைச் சேர்ந்த வீரமணி என்கிற அப்பாதுரை மனைவி சுதா(28). வீட்டில் தனியாக இரந்த சுதா வீடடில் மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக வீரமணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் |
| 807. | 6.3.2011 | **நாகை மாவட்டம்:** திட்டச்சேரி அடுத்த புத்தகரம் மவுலானா தெருவைச் சேர்ந்த தங்கராசு மனைவி சிவசங்கரி(35). அதே பகுதியைச் சேர்ந்த அன்சாரி(19). முகமுது இர்பான்(28). அப்துல்ரசீத்(28). வீட்டில் தனியாக இருந்த சங்கரி வீட்டிற்குள் நூழைந்த 3 பேரும் சங்கரியை பாலியல் பலாத்காரம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | திருமுகம் |
| 808. | 8.3.2011 | **நாகை மாவட்டம்:** கொள்ளிடம் அடுத்த திருமயிலாடி கிராமம் மெயின் போராட்டைச் சேர்ந்த அய்யப்பன்(35) மனைவி சுகந்தி(30). கணவர் அடிக்கடி குடித்துவிட்டு வருவதால் மனமுடைந்த சுகந்தி தீக்குளித்துத் தற்கொலை. தடுக்கச் சென்ற அய்யப்பனும் மரணம். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் |
| 809. | 8.3.2011 | **நாகை மாவட்டம்:** சீர்காழி அருகே வைத்தீஸ்வரன்கோவில் மேலக்கரையைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் மனைவி வினோதினி(22). திருமணமாகி 2 ஆண்டுகள் ஆன நிலையில் கூடுதல் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரதட்சணைக் கேட்டு கணவர் மள்றும் குடும்பத்தார் துன்புறுத்தியால் மனமுடைந்த வினோதினி தீக்குளித்துத் தற்கொலை. | | |
| 810. | 10.3.2011 | **நாகை மாவட்டம்:** நாகூர் வண்ணாங்குளம் மேல்கரையைச் சேர்ந்த ரஹமான் மனைவி ரபியதுல் அரபியா(24). உடல் நலமின்மையால் மனமுடைந்த ரவியதுல் அரபியா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் |
| 811. | 10.3.2011 | **நாகை மாவட்டம்:** திட்டச்சேரி அடுத்த நாட்டார்மங்கலம் கீழத்தெரு மெயின் ரோட்டைச் சேர்ந்த மாரிமுத்து மகள் தீபிகா(17). உடல்நலமின்மையால் அவதிப்பட்ட தீபிகா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் |
| 812. | 11.3.2011 | **நாகை மாவட்டம்:** நாகை கோடியக்கரைச் சேர்ந்த மீனவர்கள் சுரேஷ், முத்துராஜன், முத்துதுரை, நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் படகை சுற்றி வளைத்து மீனவர்களை மிரட்டியதோடு அவர்கள் பிடித்து வைத்திருந்த ரூ. 20 ஆயிரம் மதிப்புள்ள மீன்கள், படகில் இருந்த பொருட்களை இலங்கை கடற்படையினர் எடுத்துச் சென்றதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | திருமுகம் |
| 813. | 12.3.2011 | **நாகை மாவட்டம்:** பாப்பாக்கோவில் சுண்ணாம்புகாரத் தெருவைச் சேர்ந்த சிவக்குமார் மகன் சுதர்சன்(14). பள்ளிக்குச் சென்ற மாணவனை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | திருமுகம் |
| 814. | 12.3.2011 | **நாகை மாவட்டம்:** கொள்ளிடம் அருகே உள்ள அரசூர் ஊராட்சி புளியந்தோப்பு கிராமத்தைச் சேர்ந்த முனியசாமி(35) மனைவி ஜெயசித்ரா(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த ஜெயசித்ரா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் |
| 815. | 12.3.2011 | **தஞ்சை மாவட்டம்:** திருவிடைமருதூர் அடுத்த மல்லபுரம் மெயின்ரோட்டைச் சேர்ந்த பெரியசாமி | பெண்கள் மீதான வன்முறை & | திருமுகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகள் புஷ்பா(28). புஷ்பாவுக்கு திருமண வாழ்க்கையில் கணவர் விட்டுப் பிரிந்து சென்றதால் மனமுடைந்த தாய், தந்தை மற்றும் புஷ்பா விஷம் குடித்துத் தற்கொலை. | தற்கொலை | |
| 816. | 9.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** ஒசூர் அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனைஅறை அருகே 5 வயது பெண் அனாதையாக நின்றார். குழந்தை மீட்ட காவலர்கள் விசாரணை. | குழந்தைகள் மீதான வன்முறை | செந்தில்ராஜா |
| 817. | 15.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு அருகே, புறம்போக்கு நிலத்தில் அனுமதியின்றி மணல் அள்ளிய பொக்லைன், 2 டிராக்டர்கள் பறிமுதல். டிரைவர் | மணல் கொள்ளை | செந்தில்ராஜா |
| 818. | 15.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி மதிகோன் பாளையம் பகுதியில் தனியார் உருது பள்ளியில் 55 மாணவர்கள் தங்கி படிக்கின்றனர். 13 மாணவர்கள் இரவு சாப்பிட்டிற்கு பின் வாந்தி மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதி. | விடுதி மாணவர்கள் மயக்கம். | செந்தில்ராஜா |
| 819. | 13.3.2011 | **தருமபுரி மாவட்டம்:** மல்லாசமுத்திரம் அடுத்த கருமனூர் காகத்தாலையம்மன்கோவில் அருகே வசிக்கும் சேர்ந்தகுப்புசாமி(50) அதே பகதியைச் சேர்ந்த 5 வயது சிறுமியை பாலியல் பாலத்காரம். சிறுமி மருததுவமனையில் அனுமதி. குப்புசாமி கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | செந்தில்ராஜா |
| 820. | 13.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பர்கூர் அடுத்த கொல்லட்டி கிராமத்தைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி சங்கீதா(18). கணவன் மனைவி குடும்பத் தகராறில் சங்கீதா தூக்குப்போட்டுத் தற்கொலை | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 821. | 13.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** மொரப்பூர் சந்தைமேடு பகுதியைச் சேர்ந்த பெருமாள் மனைவி சுகுணா(20). கடைக்குச்சென்ற சுகுணாவை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா |
| 822. | 10.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தளி அருகே பொடியளம் கிராமத்தைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி சரஸ்வதி(23). கணவன் மனைவி குடும்பத் தகராறில் தூக்குப்போட்டுத் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தற்கொலை. சரஸ்வதியின் சாவில் மர்மம் இருப்பதாக பெற்றோர் பகார். | | |
| 823. | 11.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** காவலாகவுண்டனூரைச் சேர்ந்த செந்தில்குமார் மகள் தேன்மொழி, பேருந்தில் பயணம் செய்த தேன்மொழியை பையனப்பட்ள்ளியைச் சேர்ந்த வேடி கேலி செய்துள்ளதை தட்டிக் கேட்ட தேன்மொழியின் சித்தப்பா செந்தில்குமாரை வேடி தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா |
| 824. | 11.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி புதுப்பெட்டியைக் சேர்ந்த பிளஸ்‑2 மாணவி கவிதா(16). பள்ளிக்கு சென்ற கவிதாவை காணவில்லை என புகார். | குழந்தைகள்மீதான வன்முறை | செந்தில்ராஜா |
| 825. | 11.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் அருகேயுள்ள கொல்லப்பள்ளியைச் சேர்ந்த திருமலேஷ் மனைவி பிரேமா(28). திருமணமாகி 6 மாதங்களே ஆன நிலையில் பிரேமா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 826. | 11.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தொப்பூரில் அரசு பள்ளி யில் 9‑ம் வகுப்பு படிக்கும் மாணவியிடம் ஆசிரியர் தவறாக நடக்க முயன்றதாக மாணவியின் பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & வகுப்பறை வன்முறை | செந்தில்ராஜா |
| 827. | 11.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** மொரப்பூர் அருகே உள்ள ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த குழந்தைவேல் மனைவி ஜெயந்தி(21). கணவன் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | செந்தில்ராஜா |
| 828. | 11.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டியைச் அடுத்த கர்டானூரைச் சேர்ந்த ராமசாமி மகள் ராமியானஅள்ளி பகுதியில் உள்ள பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தார். இவருக்கும் அன்னாம்பட்டியைச் சேர்ந்த கோவிந்தன் மகன் இளவரசனுக்கும் நடக்க இருந்த திருமணத்தை அதிகாரிகள் தலையீட்டு நிறுத்தினர். | குழந்தைத் திருமணம் | செந்தில்ராஜா |
| 829. | 7.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** அரூர் | குழந்தைகள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடுத்த பேதாதம்பட்டியைச் சேர்ந்த சின்னவன் மகன் விஜய்(20). குடுமியாம்பட்டியைச் சேர்ந்த வைதீஸ்வரி(17) இருவரும் காதலித்து திருமணம் செய்தனர். வைதீஸ்வரியின் தந்தை கோவிந்தராஜ் அரூர் மகளிர் காவல்நிலையத்தில் மைனர்பெண்ணை திருமணம் செய்துகொண்டதாக விஜய் மீது புகார். விஜய் கைது. | மீதான வன்முறை | செந்தில்ராஜா |
| 830. | 10.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டியைச் சேர்ந்த மாது மகள் கங்கா(16) பிளஸ் –2 படித்து வருகிறார். பள்ளிக்குச் சென்ற கங்காவை பாரூரை சேர்ந்த சின்ராஜ் மகன் செந்தில்(22) கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | செந்தில்ராஜா |
| 831. | 6.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** கிருஷ்ணபுரம் அருகே உள்ள ஏ. முருக்கம்பட்டியைச் சேர்ந்த பழனி மனைவி லட்சுமி(45). மனநிலை பாதிக்கப்பட்ட லட்சமி ரயில் தண்டவாளத்தில் ரயிலில் விழுந்து தற்கொலைக்கு முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | செந்தில்ராஜா |
| 832. | 5.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** மத்தி கிரி நேதாஜி நகரைச் சேர்ந்த குல்லப்பா மகள் வெங்கடலட்சுமி (17). வீட்டில் தனியாக இருந்த வெங்கடலட்சுமி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 833. | 5.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** கரங்கல்பட்டிை குகை மூசுக்காடு பகுதியைச் சேர்ந்த வினோதினி(16) 9–ம் வகுப்பு படித்து வந்தார். பள்ளி சென்ற வினோதினியை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | செந்தில்ராஜா |
| 834. | 4.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** மான்கோட்டை ராஜா காலனியைச் சேர்ந்த லட்சுமணன் மகள் வசந்தா(20). கணவர் பெருமாள்(28). திருமணம் நடந்து 11 மாதங்களே ஆன நிலையில் வசந்தா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 835. | 11.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பர்கூரை அடுத் சின்னபனமுட்லாலை சேர்ந்த 4 வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த 17 வயது வாலிபர் பாலியல் பலாத்காரம். இளைஞர் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |

| | | | | |
|---|---|---|---|---|
| 836. | 8.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் பி.முதுகானப்பள்ளியில் ஜே.சி.பி. மூலம் அனுமதியின்றி மணல் அள்ளிய 5 லாரிகள் அதிகாரிகளால் பறிமுதல். | மணல் கொள்ளை | செந்தில்ராஜா |
| 837. | 14.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் புங்கன்தொட்டியைச் சேர்ந்த ரஞ்சிதா(19). கணவர் கிரண்குமார்(21). இருவரும் காதலித்து திருமணம் செய்தனர். கணவர் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக ரஞ்சிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | செந்தில்ராஜா |
| 838. | 3.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த கடத்துரை சேர்ந்த சந்தானசெல்வம் மனைவி மைதிலி(26). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த மைதிலி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 839. | 3.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னாகரம் அருகே பூதநத்தம் பகுதியைச் சேர்ந்த சிவக்குமார்(29) மனைவி கண்ணம்மாள்(25). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த கண்ணம்மாள் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 840. | 5.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் அடுத்த உத்தனப்பள்ளியைச் சேர்ந்த மாரப்பா மகள் பிரமிளா(21) . வீட்டில் தனியாக இருந்த பிரமிளா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா |
| 841. | 11.3.2011 | **சேலம் மாவட்டம்:** மேட்டூர் பவானியைச் சேர்ந்த வசந்தி(40). மகள்களிடம் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த வசந்தி மேட்டூர் அணையில் குதித்து தற்கொலைக்கு முயற்சி. காவலர்கள் தடுத்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி. | செந்தில்ராஜா |
| 842. | 11.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னகாரம் பாலக்கோடு அருகே காவலர்கள் வாகன சோதனையில் ஈடுபட்ட போது அவ்வழியாக அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற லாரி பறிமுதல். அதே பகுதியைச் | மணல் கொள்ளை | செந்தில்ராஜா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த டிரைவர் துரை( 29) கைது. | | |
| 843. | 17.3.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சின்ன மாயாகுளத்தைச் சேர்ந்த ஜெயபால் மகன் ஆமோஷ் ராஜா(13). கீழக்கரையில் உள்ள ஹமீதியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஆமோஷ்ராஜாவை தலைமை ஆசிரியர் அசன் இபுறாகிம் ஆமேஷ் முதுகில் தாக்கியதுடன், செருப்பு காலால் மிதித்ததில் காயமடைந்த மாணவர் மருத்துவமனையில் சிகிச்சை. ஆசிரியர் மீது மாணவரின் பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 844. | 18.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** நந்திரெட்டியபட்டி பிச்சாண்டி மகள் பாலாமணி(4) அங்கன்வாடியில் படிக்கும் பாலாமணியை அங்கவன்வாடி உதவியாளர் எம்.ராஜலட்சுமி, பணியாளர் கமலாதேவி இருவரும் சமையலறை அடுப்பில், விறகை தள்ளிவிடுமாறு கூறிவிட்டு, வெளியில் சென்றுவிட்டனர். திடிரென அங்கன்வாடியில் எற்பட்ட தீ விபத்தில் பாலாமணி காயம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 845. | 18.3.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் அருகில் உள்ள புல்ரம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த புருஷோத்தமன் (32) மனைவி தனலட்சமி(25) குழந்தைகள் சரண்யா (3), சந்தியா(3). குடும்ப வறுமை காரணமாக மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளை கழுத்தை நெறித்துக் கொலை செய்துவிட்டு புருஷோத்தமனும் தூக்குப்போட்டுத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & வறுமை & தற்கொலை | தீக்கதிர் |
| 846. | 18.3.2011 | **கோவை மாவட்டம்:** கோவை இராமநாதபுரம் சுங்கம் பகுதி அகஸ்டீன் வீதியைச் சேர்ந்த ரவி(44) செரினா(32). மைதிலி(34) மூவரும் தங்கள் வீட்டருகில் வசிக்கும் ஒரு குடும்பத்தை சேர்ந்த 5–ம் வகுப்பு படிக்கும் மாணவியை விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக மூவரும் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 847. | 18.3.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை தண்டையார் பேட்டை திலகர் நகரைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் கஜேந்திரன் என்ற பாபு(38). வாகனச்சோதனையின் போது காவர்கள் லஞ்சம் கேட்டு கஜேந்திரன் தர மறுத்ததால் காவலர்கள் ஆட்டோவை பறிமுதல் செய்தனர். காவலர்களின் லஞ்ச வேட்டையாலும், மோசமான அணுகுமுறையாலும் மனமுடைந்த கஜேந்திரன் தீக்குளித்துத் தற்கொலை. | காவலல் நிலையச் சித்திரதை & தற்கொலை | தீக்கதிர் |